
## பட்டியலின மக்களை ஏமாற்றும் பா.ஜ.க.!

பாரதிய ஜனதா கட்சி, பட்டியலின மக்களுக்கும், மதச் சிறுபான்மையினருக்கும் எதிரான கட்சி என்பதை, இந்தியாவின் அனைத்து ஜனநாயக சக்திகளும் தொடர்ந்து சாடி வருகின்றன. அந்தக் குரலுக்குச் செவி மடுக்காத, சொந்த நலன்களுக்காக மட்டுமே பாரதிய ஜனதா கட்சியில் இருக்கும் பட்டியலினத்தவரும், சிறுபான்மையினரும் சுயமரியாதையுடன் இருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.கவின் மூன்றாம் படையினராகத்தான் இருந்து வருகின்றனர்.

அந்தக் கட்சியில் இருந்து ஏழாவது முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த எம்.பி. ரமேஷ் ஜிகஜினாகி, சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், பா.ஜ.க.வில் பட்டியலினத்தவர் எப்படி புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதை விளக்கியிருக்கிறார். “தற்போதைய ஒன்றிய அமைச்சரவையில், உயர் சாதி எம்.பிக்கள் மட்டுமே கேபினட் அமைச்சர்களாக உள்ளனர். தென்னிந்தியாவில் இருந்து ஏழாவது முறையாகத் தொடர்ந்து வெற்றிபெற்ற எனக்கு பதவி அளிக்கப்படவில்லை, எனக் குற்றம் சாட்டியிருக்கிறார். பா.ஜ.க. பட்டியலின மக்களுக்கு எதிரான கட்சி என்பதை பலரும் எச்சரித்தனர். இப்போது அது உறுதியாகியுள்ளது, என தனது மனக்குமுறலையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும், உயர் சாதியினராக இருந்தால், அவர்கள் ஒன்றிய அரசில் நிதித்துறை, வெளியுறவு என முக்கியப் பொறுப்புகளை வகிக்க முடியும். ஆனால், ஏழு முறை தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பட்டியலின எம்.பி. புறக்கணிப்படுவார் என்பதுதான், பா.ஜ.க.வின் உண்மை முகம். ரமேஷ் ஜிகஜினாகி எம்.பி.க்கு, பதவி கிடைக்கவில்லை என்பதால், காலம் கடந்து ஞானம் கிடைத்தாலும், பா.ஜ.க. பட்டியலின மக்களை ஏமாற்றும் கட்சி என்பதை, அவர் உரக்கப் பேசுவதே உண்மையான மனசாட்சியாக இருக்கும்.

## :ப்ளாஷ்பேக்





பல்ராம் தனுஷ்கோடி

### தலைவரும், தளபதியும் வருகை தந்த மணவிழா!

தலைவர் கலைஞர் அவர்களால் ‘பால் உள்ளம் கொண்ட பால்ராஜ்’, ‘பாட்டாளிகளின் தோழன் பால்ராஜ்’ என்று பாராட்டப்பட்டவர், என்னுடைய பெரியப்பா பால்ராஜ் அவர்கள். 1992-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், எங்கள் இல்லத் திருமண விழாவை நடத்தி வைக்க மதுரைக்கு வருகை தந்தார். அவரை வரவேற்று சால்வை அணிவித்து, சிறப்பு செய்தார் என்னுடைய பெரியப்பா. அதே நாள் மாலை, தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் இல்லம் வந்து மணமக்களை வாழ்த்தியது, எங்கள் குடும்பத்திற்கே மறக்க முடியா தருணம்.

**– பல்ராம் தனுஷ்கோடி,**
**மாநகர் மாவட்ட முன்னாள் பொறுப்புக்குழு உறுப்பினர்.**
**மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அதிர வைத்த மும்முனைப் போராட்டம்!

1953-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13-ஆம் தேதி சென்னையில், தி.மு.கழகத்தின் செயற்குழு கூடி, மும்முனைப் போராட்டத்துக்கு ஆயத்தம் செய்தது. குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து, ராஜாஜியின் வீட்டு முன்பு ஈ.வி.கே.சம்பத் தலைமையில் மறியல் செய்யவேண்டும். கலைஞர் தலைமையில், கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம். கழகத்தின் போராட்டங்களை, பிரதமர் நேரு தவறாகச் சித்தரித்ததால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரயில் மறியல் போராட்டம் நடத்துவது எனத் தீர்மானம் நிறைவேற்றியது.

## சீரணி → இளைஞர் அணி


19

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்

## கிராம சேவைப் பயிற்சி!



*சீரணி என்பது அடிப்படையில், மக்களுக்கான சில அத்தியாவசியத் தேவைகளை மக்களைக் கொண்டே நிறைவேற்றுவது எனும் கொள்கையின்படி இயங்கியது. கிராமம், நகரம் என்ற வித்தியாசம் பாராமல், தமிழ்நாடு முழுவதும் சீரணி பல முன்னேற்றப் பணிகளை முன்னெடுத்தது. எனினும், கிராமங்களில் சீரணி ஏற்படுத்திய தாக்கம் மிகவும் ஆழமானது.*

*பொதுவாக நகரங்களில், கற்றவர்கள் அதிகம் இருப்பார்கள். எனவே, அவர்களுக்கான சமூகத் தேவைகள் வேறாக இருக்கும். கிராமங்களில், கற்றவர்கள் அதிகம் இல்லாத சூழலில், அவர்களுக்கான அடிப்படைச் சமூகத் தேவைகள் என்பவை வேறாக இருக்கும். இந்த வித்தியாசங்களைப் புரிந்துகொண்டு அன்று சீரணித் தொண்டர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.*

*அப்படி ஒரு பயிற்சி திருவண்ணாமலை மாவட்டம், சத்திய விஜயநகர கிராமியப் பயிற்சி நிலையத்தில், 1969 டிசம்பர் 1 அன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட அன்றைய உணவு அமைச்சர் ப.உ.சண்முகம் அவர்கள் பேசியதாவது:*

*“மிகவும் தேவையான காரியங்களை கிராம மக்களுக்குச் சொல்லுவதற்காகவும், கிராமத்திற்குப் பயன்படத்தக்க காரியங்களை நீங்கள் கற்றுக்கொண்டு போவதற்காகவும் இந்த முகாம் பயன்பட வேண்டும். நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, இங்கே எத்தனையோ தலைவர்கள் உயிரைக் கொடுத்து இந்த உலகத்தைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். அப்படி திருத்தி அமைத்த உலகத்தில், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும் திருத்தப்பட வேண்டும். அந்தத் தலைவர்கள் பட்டியலிலே நாம் இடம் பெறாவிட்டாலும், காந்தியார் போல், பேரறிஞர் அண்ணாவைப் போல் நாம் அந்த மனங்களிலே இடம் பெறாவிட்டாலும், நம்மாலான சிறிய உதவியை யாவது செய்ய வேண்டாமா?*

*மரமாக இருந்தால் நிழலாக இருந்திருப்போம்; தண்ணீராக இருந்திருந்தால், மழையாகப் பெய்திருப்போம். ஆனால், மனிதனாகப் பிறந்து எந்தவிதப் பயனுமின்றி தங்களுடைய வீடு உண்டு, குடும்பம் உண்டு, சொத்து உண்டு, வியாபாரம் உண்டு என்று இப்படி இருப்பது, நாட்டிற்கும் நல்லதல்ல. வீட்டிற்கும் நல்லதல்ல. நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் கிராம மக்களிடத்துச் சென்று தொண்டு உள்ளத்தைப் பதிய வையுங்கள் என்பதுதான்!”*

*அண்ணா அவர்கள் தொடங்கிய சீரணியை, முன்னெடுத்துச் செல்வதில் இதர அமைச்சர்களும் எவ்வளவு ஆர்வமாக இருந்தார்கள், சீரணியின் ஆன்மாவை எவ்வளவு ஆழமாக உள்வாங்கிக் கொண்டு செயல்பட்டார்கள் என்பதற்கு அன்றைய அமைச்சர்கள் ஏற்பாடு செய்த இதுபோன்ற பயிற்சிகள் நமக்குக் காட்டுகின்றன.*

**“நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் கிராம மக்களிடத்துச் சென்று தொண்டு உள்ளத்தைப் பதிய வையுங்கள் என்பதுதான்!”**

### அண்ணாவின் சாதனை என்ன?

சீரணி அரங்கத் திறப்பு விழாவில் கலைஞர் பேசும்போது, “நான் அண்ணா அவர்கள் அதைச் சாதித்தார், இதைச் சாதித்தார் என்றெல்லாம் பட்டியல் போட்டுக் காட்ட வரவில்லை. அவருடைய இரண்டாண்டுகள் ஆட்சியில் ஏறத்தாழ 50 சாதனைகளைச் செய்தார்கள். அதை நான் இங்கே விளக்க விரும்பவில்லை. எதைச் சாதனை என்று சொல்கிறேன் தெரியுமா? பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர், ‘அண்ணாதுரைக்குச் சிலை வைப்பது அவமானம்’ என்று பேசியதைக் கேட்டுக்கொண்டு தமிழ்நாட்டு மக்கள் அமைதியாக இருக்கிறார்களே... அந்த அமைதியை உருவாக்கினாரே, அதற்குப் பெயர்தான் சாதனை. அந்தச் சாதனையை மட்டும் அவர் செய்யாமல் இருந்தால் இப்படி பேசியவர்களைப் பொடிப் பொடியாக்கியிருப்பார்கள் தமிழ்நாட்டு மக்கள்!” என்றார்.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

19

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

## துணிவாக நின்ற வரலாறு!



***அரசியல் சட்டப் புத்தகத்தைக் கையில் ஏந்தி, இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் உறுதிமொழி ஏற்ற நிலையில், எமர்ஜென்சி கொடுமைகளை தி.மு.க மறந்துவிட்டதா என்று நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. கேட்கிறதே?***

*இந்திராகாந்தி அம்மையார் ஆட்சிக் காலத்தில் 1975-ஆம் ஆண்டு ஜூன் 25 அன்று நள்ளிரவில் நடைமுறைக்கு வந்த எமர்ஜென்சி எனும் நெருக்கடி நிலைக் காலத்தை, தி.மு.க. என்கிற மாநிலக் கட்சி போல துணிவாக எதிர்த்து நின்ற வரலாறு வேறு இயக்கத்திற்குக் கிடையாது. இது ஜனநாயக விரோதச் செயல் எனத் தீர்மானம் நிறைவேற்றி, அதனைத் தொண்டர்களும் மக்களும் திரண்ட கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் உறுதிமொழியாக ஏற்கச் செய்த காரணத்தால், கலைஞர் தலைமையிலான ஆட்சியையே தி.மு.க. இழக்க நேரிட்டது. கலைஞரைத் தனிமைப்படுத்தி, கழகத்தின் முன்னோடிகள் கைது செய்யப்பட்டனர். ‘முரசொலி’ கடும் தணிக்கைக்குள்ளானது. முரசொலி மாறன், ஆற்காடு வீராசாமி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், டி.ஆர்.பாலு, திருச்சி சிவா எனத் தமிழ்நாடு முழுவதும் 500க்கும் அதிகமான கழகத்தினர் மிசா சட்டத்தின் கீழ், சிறைபட்டு சித்ரவதைகளை அனுபவித்தனர். சென்னை சிறையில் சிட்டிபாபுவையும் மதுரை சிறையில் பாலகிருஷ்ணனையும் உயிர்ப்பலி கொடுக்க நேர்ந்தது.*

*மகன், மருமகன், உடன்பிறப்புகள் ஆகியோர் கடும் சித்ரவதைக்குள்ளான நிலையிலும், சென்னை அண்ணா சாலையில் நடந்தே சென்று, துண்டறிக்கைகளை விநியோகித்து, அறவழிப் போராட்டம் நடத்திய ஜனநாயகக் காவலர் தலைவர் கலைஞர். அதன் தொடர்ச்சியாக 1977-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா அம்மையாரும் இந்திரா காங்கிரசாரும் தோல்வி அடைந்தனர். பின்னர் நாட்டின் நிலையான தன்மையைக் கருதி, 1980-ஆம் ஆண்டு தேர்தலில் இந்திரா காங்கிரசை, தி.மு.க ஆதரித்தது. சென்னை, கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டத்தில், எமர்ஜென்சி கால நிகழ்வுகளுக்காக இந்திராகாந்தி அம்மையார் பகிரங்க மன்னிப்பு கேட்டார். மீண்டும், வென்று ஆட்சியமைத்தார்.*

*கலைஞரைப் போலவோ கழகத் தலைவர் போலவோ எமர்ஜென்சி கொடுமைகளை எதிர்கொண்டாரா மோடி? மாறுவேடத்தில் தலைமறைவாக எங்கோ பதுங்கியிருந்ததுதான் பா.ஜ.க பிரதமரின் வரலாறு. அவருடைய ஆட்சி அறிவிக்கப்படாத எமர்ஜென்சியின் காலமாக அல்லவா இருக்கிறது. அரசியல் சாசனச் சட்டப் புத்தகத்துக்கு பயந்தவர்கள் இப்போது தி.மு.க.வுக்கு எமர்ஜென்சி காலத்தை நினைவூட்டுவது அரசியல் பித்தலாட்டம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?*


**அரசியல் சாசன சட்டப் புத்தகத்துக்கு பயந்தவர்கள் இப்போது தி.மு.க.வுக்கு எமர்ஜென்சி காலத்தை நினைவூட்டுவது அரசியல் பித்தலாட்டம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?**

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

536

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.